டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 9.08.2026 ஞாயிற்றுக்கிழமை | பக்கங்கள் 29 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 045 - Madurai | Online Edition

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்

# வெண்டைக்காய் விதைப்புக்கு முந்தைய விலை முன்னறிவிப்பு

கோயம்புத்தூர், ஆக.8

இந்தியாவில் வெண்டைக்காய் முக்கிய விவசாய மண்டலங்களில் பெருமளவில் பயிரிடப்படுகிறது. வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சகத்தின் 2024-25 ஆம் ஆண்டிற்கான இறுதி மதிப்பீடுகளின் படி, இப்பயிர் சுமார் 5.63 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் பயிரிடப்பட்டு, ஆண்டுக்கு சுமார் 76.99 லட்சம் டன் உற்பத்தி செய்யப்படுகிறது.

குஜராத், மத்தியப்பிரதேசம், ஆந்திரப்பிரதேசம், மேற்குவங்கம் மற்றும் பீகார் ஆகியமாநிலங்கள் தேசிய அளவில் உற்பத்தியில் முன்னணியில் இருந்தாலும், தமிழ்நாடும் ஒரு முக்கிய உற்பத்தியாளராகவும் அதிக நுகர்வு கொண்டமாநிலமாகவும் விளங்குகிறது. தமிழ்நாட்டில் தர்மபுரி, சேலம், திருவண்ணாமலை மற்றும் திருப்பத்தூர் ஆகியவை வெண்டைக்காய் பயிரிடப்படும் முக்கிய மாவட்டங்களாகும்.

இப்பயிர் முக்கியமாக ஆடிப்பட்டம் (ஜூன் முதல் ஆகஸ்ட் வரை) மற்றும் தைப் பட்டம் (பிப்ரவரி) ஆகிய இரு பருவங்களில் பயிரிடப்படுகிறது.

ஆண்டு முழுவதும் உள்நாட்டில் நல்ல தேவை நிலவும் அதே வேளையில், அண்டை பிராந்தியங்கள் மற்றும் உலகளாவிய ஏற்றுமதிச் சந்தைகளுக்குத் தேவையான வெண்டைக்காயை வழங்குவதில் தமிழ்நாடு முக்கிய மையமாகத் திகழ்கிறது.

அடர்பச்சை நிறம் மற்றும் பளபளப்பான தோற்றம் கொண்ட வெண்டைக்காய் வகைகளையே நுகர்வோர் அதிகம் விரும்புவதாக வர்த்தகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போது, ஒட்டன்சத்திரம், கோயம்புத்தூர் மற்றும் ஓசூர் போன்ற உள்ளூர் உற்பத்திச் சந்தைகளிலிருந்து வரும் புதிய விளைபொருட்கள், மாநிலம் முழுவதும் உள்ள முக்கிய மொத்த விற்பனைச் சந்தைகள் மற்றும் உழவர் சந்தைகளுக்குத் தொடர்ந்து விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இச்சூழலில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வுகள் மையத்தின் கீழ் இய ங்கும் உள் நாட்டு மற்றும் ஏற்றுமதிச் சந்தை நுண்ணறிவுப் பிரிவு, ஒட்டன்சத்திரம் மற்றும் கோயம்புத்தூர் சந்தைகளில் கடந்த 15 ஆண்டுகளில் நிலவிய வெண்டைக்காய் விலைகளை ஆய்வு செய்ததுடன், வர்த்தகர்களிடம் விரிவான கருத்துக் கணிப்புகளையும் மேற்கொண்டது. பொருளாதார அளவீட்டு காலத் தொடர் பகுப்பாய்வு மற்றும் தற்போதைய சந்தை வரத்து ஆகியவற்றின் அடிப்படையில், அறுவடை காலத்தில் தரமான

வெண்டைக்காயின் பண்ணை விலை கிலோவுக்கு ரூ.35 முதல் ரூ.37 வரை இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, விவசாயிகள் தங்கள் விதைப்பு முடிவுகள், பயிர் மேலாண்மை மற்றும் சந்தைப்படுத்தல் உத்திகளை இதற்கேற்ப திட்டமிடுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

சந்தைப்படுத்தல் தொடர்பான விவரங்களுக்கு, உள்நாட்டு மற்றும் ஏற்றுமதிச் சந்தை நுண்ணறிவுப்பிரிவு, வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வுகள் மையம், மற்றும் தொழில் நுட்ப விவரங்களுக்கு, பேராசிரியர் மற்றும் தலைவர், காய்கறிப் பயிர்கள் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் – 641 003ல் தொடர்பு கொள்ளலாம்.




மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# சோளம், நிலக்கடலை பயிருக்கு பயிர் காப்பீடு செய்திட வரும் 17ஆம் தேதி கடைசி நாளாகும்!

சேலம், ஆக.8

சேலம் மாவட்டம், மகுடஞ்சாவடி வட்டாரம், எர்ணாபுரம் பிர்க்காவிற்குட்பட்ட சோளம் மற்றும் நிலக்கடலை பயிர் செய்துள்ள விவசாயிகள் பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத்திட்டத்தின் கீழ் பயிர்க் காப்பீடு செய்திட 17.08.26 ஆம் தேதி கடைசி நாளாகும்.

எனவே நிலக்கடலை மற்றும் சோளம் பயிர்களுக்கு வறட்சி, பூச்சி நோய் தாக்குதல் மற்றும் வெள்ளம் போன்ற இயற்கைப் பேரிடர்களால் ஏற்படும் மகசூல் மற்றும் பயிர் இழப்புகளுக்கு இழப்பீடு பெற்றிட, பயிர் காப்பீடு செய்திட கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள். அடங்கல், பட்டா, ஆதார் அட்டை மற்றும் வங்கி கணக்கு பாஸ்புத்தகம் ஆகிய ஆவணங்களுடன் கணினி பொது சேவை மையம் / கூட்டுறவு சொசைட்டி / அரசு – தனியார் வங்கிகளை அணுகி, நிலக்கடலை பயிருக்கு ஏக்கருக்கு ரூ.447/– மற்றும் சோளம் பயிருக்கு ரூ.204/–யும் செலுத்தி, பயிர்க் காப்பீடு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

பயிர் அறுவடை பரிசோதனை அடிப்படையிலான பயிர் இழப்பிற்கு நிலக்கடலைக்கு அதிகபட்சமாக ஏக்கருக்கு ரூ.22,329/– வரையிலும், சோளத்திற்கு அதிகபட்சமாக ஏக்கருக்கு ரூ.10,176/– வரையிலும் காப்பீட்டுத் தொகை பெற இயலும்.

மேலும் விபரங்களுக்கு மகுடஞ்சாவடி வட்டார வேளாண்மை அலுவலகத்தை அணுகிடவோ அல்லது உழவர் செயலி, க்ரிஷி ரக்ஷக் கட்டணமில்லா தொலைபேசி எண். 14447 அல்லது வாட்ஸ்அப் தானியங்கி உதவி எண். 70655 14447 போன்ற தகவல் தொடர்பு சாதனங்களை பயன்படுத்தி தகவல்களை அறிந்து பயிர் காப்பீடு செய்திட விவசாயிகளை மகுடஞ்சாவடி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் கேட்டுக்கொள்கிறார்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

**சிறப்புச்சலுகை**



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# வகை வகையான சூப் தொடர்...

# சூப் செய்வது எப்படி?



**11. ப்ரோக்கோலி சூப்**

**தேவையான பொருட்கள்**

ப்ரோக்கோலி — 2 கப்

வெங்காயம் — 1

பூண்டு — 2 பல்

மிளகு தூள் – சிறிதளவு

உப்பு – தேவையான அளவு

**செய்முறை**

ப்ரோக்கோலியை வேக வைத்து அரைத்து கொதிக்கவிட்டு பரிமாறவும்.

தொகுப்பு : *G.சுரேஷ்குமார், ஆசிரியர் ஓய்வு, கோவில்பட்டி.*

**நாளை தொடரும்...**

மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!



# மதுரை வேளாண்மை அறிவியில் நிலையத்தில் தேனீ வளர்ப்பு பயிற்சி

மதுரை, ஆக.8

மதுரை வேளாண்மை அறிவியல் நிலையத்தில் விவசாயிகள் மற்றும் தொழில் முனைவோருக்கு தேனீ வளர்ப்பு குறித்த ஒரு நாள் பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சியில் தேனீயின் வகைகள், இந்திய மற்றும் இத்தாலிய தேனீ வளர்ப்பு நுட்பங்கள் மற்றும் இயற்கையில் வளர கூடிய கொசு மற்றும் கொம்பு தேனீக்களை பிடித்து வளர்த்தல், தேன் எடுத்தல் பற்றி செயல் முறை விளக்கம் அளிக்கப்படுகிறது. மேலும் தேனில் இருந்து மதிப்பு கூட்டிய பொருட்கள் தயாரித்தல் மற்றும் அவற்றை சந்தை படுத்துதல் பற்றியும் பயிற்சி அளிக்கப்படும்.

மாதந்தோரும் 10 ஆம் தேதி நடத்தப்படும். கட்டணம் உண்டு. சான்றிதழ் வழங்கப்படும்.

தொடர்புக்கு : ***முனைவர் கி.சுரேஷ், திட்ட ஒருங்கிணைப்பாளர், வேளாண் அறிவியல் நிலையம், வேளாண் கல்லூரி, மதுரை. WhatsApp No. 99652 88760.***

# டிரோன் வெற்றி கதை-விவசாயியின் அனுபவத்தை விளக்கும் வேளாண்மை உதவி இயக்குனர்



இராணிப்பேட்டை, ஆக.8

டிரோன் என்பது மனிதர் உள்ளே அமராமல் தொலைவில் இருந்து அல்லது தானாகவே இயக்கப் படும் ஆளில்லா வானூர்தி ஆகும். இது ரிமோட் கண்ட்ரோல் அல்லது முன் கூட்டியே திட்டமிட்ட பாதையை பயன்படுத்தி பறக்க முடியும்.

வேளாண்மைத் துறையில் டிரோன் பூச்சிக்கொல்லி மற்றும் உரம் தெளிக்கவும், பயிர்களின் வளர்ச்சியை கண்காணிக்கவும் பூச்சி மற்றும் நோய் தாக்குதல், நீர் பற்றாக்குறை கண் கானித்தல், மகசூல் மதிப்பீடு ஆகியவற்றிற்கு பயன்படுத்தப் படுகிறது. இதனால் நேரமும் செலவும் மிச்சப்படுவதுடன் தொழிலாளர் தேவை மிகவும் குறைகிறது.

இராணிப்பேட்டை மாவட்டம், நெமிலி வட்டாரம், செல்வமந்தை கிராமத்தில் வசித்து வரும் பெருமாள் பல ஆண்டுகளாக நெல், மணிலா, உளுந்து சாகுபடி செய்து வருகிறார். அவர் டிரோன் மூலம் பெற்ற வெற்றியை கூறுகையில், முன்பெல்லாம் பயிர்களுக்கு மருந்து தெளிக்க அதிக நேரமும், அதிக செலவும் ஆனது. தொழிலாளர்கள் கிடைக்காததால் மருந்து தெளிப்பது தாமதமாகி பயிர்களின் மகசூலும் பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டது.

இந்நிலையில் நான் ஆறு ஏக்கர் கோ – 51 நெல் ரகம் சாகுபடி செய்தேன். எனது ஆறு ஏக்கர் நெல் வயலுக்கு கை முறையில் பூச்சி மருந்து தெளிக்க 7 – 10 தொழிலாளர்கள் மற்றும் இரண்டு, மூன்று நாட்கள் தேவைப்படும் நிலை ஏற்பட்டது. இதனால் புதிய தொழில் நுட்பமான டிரோன் மூலம் மருந்து தெளிக்கும் முறையை பயன் படுத்த முடிவு செய்தேன். ஆரம்பத்தில் சிறிது தயக்கம் இருந்தாலும் அதை பயன்படுத்த முடிவு செய்து நெமிலி வட்டார வேளாண்மைத் துறையை அணுகினேன். நெமிலி வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் அருணா குமாரி தலைமையில் வட்டார தொழில்நுட்ப மேலாளர் நிர்மலா தேவி மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர் முகிலன் 2025-26 ஆண்டிற்கான ட்ரோன் தெளிப்பு குறித்த செயல் விளக்கத்தினை எனது நெல் வயலில் அமைக்க உதவி புரிந்தனர்.

டிரோன் மூலம் மிகக் குறைந்த நேரத்தில் முழு வயலுக்கும் சம மாக மருந்து தெளிக்க முடிந்தது. மருந்தும் வீணாகாமல் சேமிக்கப் பட்டது. மருந்து சீராக பரவியதால் பூச்சி தாக்குதலும் வெகுவாக குறைந்தது. தேவையான இடங்களில் மட்டும் மருந்தை தெளிக்க முடிந்ததால் மருந்து வீணாவது குறைக்கப்பட்டது. வயலுக்குள் நடந்து செல்ல தேவையில்லை என்பதால் நெற்பயிர் சேதாரம் ஏற்படுவதும் தவிர்க்கப்பட்டது. மேலும் தொழிலாளர் செலவும் குறைந்தது முக்கியமாக நச்சு மருந்துகளுடன் நேரடியாக தொடர்பு கொள்ள வேண்டிய அவசியம் இல்லாததால் என் உடல் நலமும் பாதுகாக்கப்பட்டது. இந்த மாற்றத்தின் மூலம் என் பயிர்களின் தரமும் மகசூலும் உயர்ந்து, செலவு குறைந்து அதிக லாபம் கிடைத்தது. இதில் முக்கியமாக கவனிக்கப்பட வேண்டிய வியங்கள் காற்று அதிகமாக வீசும் நேரங்களில் தெளிக்க கூடாது மற்றும் டிரோன் இயக்குபவர் பயிற்சி பெற்றவராக இருக்க வேண்டும் என்பதாகும். மேலும் அரசின் வழிகாட்டுதலின்படி அங்கீகரிக்கப்பட்ட டிரோன்களையும் அனுமதிக்கப்பட்ட பூச்சிக்கொல்லி மருந்து களையும் மட்டுமே பயன்படுத்தினேன். இன்று கிராமத்தில் உள்ள மற்ற விவசாயிகளும் என் வயலை பார்வையிட்ட பின் அவர்களும் டிரோன் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி மருந்து தெளிக்க ஆர்வம் காட்டுகிறார்கள். புதிய தொழில்நுட்பத்தை நம்பிக்கையுடன் ஏற்றுக் கொண்டதே என் வெற்றிக்கான காரணம் ஆகும் என தெரிவித்தார்.

Rithvik Pipe

IS 4985 : 2021 IS 9537

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்



## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

POWERGRID BHEL

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# மல்லப்பள்ளி கிராமத்தில் ஆத்மா பண்ணைப் பள்ளி : வேளாண் விஞ்ஞானிகள்-விவசாயிகள் கலந்துரையாடல்




வேலூர், ஆக.8

வேலூர் மாவட்டம், மல்லப்பள்ளி கிராமத்தில் வட்டார ஆத்மா (ATMA) திட்டத்தின் பண்ணைப் பள்ளி திட்டத்தின் கீழ் வேளாண் விஞ்ஞானிகள் மற்றும் விவசாயிகள் பங்கேற்ற சிறப்பு தொழில் நுட்பக் கலந்துரையாடல் மற்றும் பயிற்சி நிகழ்ச்சி நடைபெற்றது.

கிராமப்புற விவசாயிகளுக்கு நவீன வேளாண் தொழில் நுட்பங்களைக் கொண்டு சேர்க்கும் நோக்கில் இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இப்பயிற்சி முகாமில் பாலாறு வேளாண் கல்லூரி, தாவர நோயியல் துறை, உதவிப் பேராசிரியர் முனைவர் கு.விக்னேஷ் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்.

அவர் தனது உரையில், இப்பகுதியில் முக்கியப் பயிர்களான தென்னை, வாழை மற்றும் கரும்பு ஆகியவற்றைத் தாக்கும் பல்வேறு நச்சுயிரி (Viral) மற்றும் பூஞ்சாண (Fungal) நோய்களைக் கண்டறியும் எளிய வழிமுறைகள் குறித்தும், அவற்றை ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகள் மூலம் எவ்வாறு கட்டுப்படுத்துவது என்பது குறித்தும் விவசாயிகளுக்கு விரிவான செயல்முறை விளக்கங்களை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் 50-க்கும் மேற்பட்ட முன்னோடி விவசாயிகள் கலந்து கொண்டு, தங்களது பயிர்களில் ஏற்படும் பூச்சி மற்றும் நோய் பாதிப்புகள், அவற்றுக்கான தடுப்பு மேலாண்மை முறைகள் குறித்து விஞ்ஞானிகளுடன் விரிவாகக் கலந்துரை யாடி ஆலோசனை பெற்றனர். வட்டார வேளாண் மற்றும் தோட்டக்கலைத் துறை அலுவலர்கள், ஆத்மா திட்டப் பணிய-ாளர்கள் ஆகியோர் இணைந்து இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடு களைச் செய்திருந்தனர். இறுதியில், துணை வேளாண்மை அலுவலர் நன்றியுரை வழங்க நிகழ்ச்சி இனிதே நிறைவுற்றது.

# தென்மலையில் வேளாண் மாணவர்களின் பங்கேற்பு கிராமப்புற மதிப்பீடு நிகழ்ச்சி



தென்காசி, ஆக.8

தென்காசி மாவட்டம், வாசுதேவ நல்லூர் வட்டாரம், தென்மலை கிராமத்தில், கலசலிங்கம் பல்கலைக்கழக இறுதியாண்டு வேளாண் மாணவர்கள் பத்ம ஸ்ரீ ஜோதி.ச, கமலேஸ்வரி.அ, பிரிய தர்ஷினி.பூ, யாழினி.த அபர்ணா தேவி.ரா, மற்றும் ஞானமதி.கு ஆகியோர், தென்மலை ஊராட்சி மன்றத் தலைவர் மீனா லதா வழிகாட்டுதல் மற்றும் ஆதரவுடன், கிராமத் தங்கல் திட்டத்தின் ஒரு பகுதியாக பங்கேற்பு கிராமப்புற மதிப்பீடு (Participatory Rural Appraisal - PRA) நிகழ்ச்சியை நடத்தினர். இதில் விவசாயிகள் மற்றும் பொதுமக்களின் பங்கேற்புடன் பல்வேறு PRA செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக, தென்மலை கிராமத்தில் விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் சந்திக்கும் முக்கிய பிரச்சினை களை கண்டறிந்து, அவற்றிற்கு முன்னுரிமை அளிக்கும் வகை யில் பிரச்சினை தர வரிசை அட்டவணை (Problem Ranking Matrix) தயாரிக்கப்பட்டது. இதன் மூலம் கிராம மக்களுடன் கலந்துரையாடி, அவர்களின் கருத்துகளின் அடிப்படையில் பிரச்சினைகள் தர வரிசைப்படுத்தப்பட்டன. இதில் நீர்ப்பாசனம் மற்றும் நீர் பற்றாக் குறை முதலிடத்திலும், அதனைத் தொடர்ந்து பூச்சி மற்றும் நோய் தாக்குதல், உரங்கள் மற்றும் உற்பத்திச் செலவு அதிகரிப்பு, வேலையாட்கள் பற்றாக்குறை, விற்பனை விலை குறைவு மற்றும் கடன் சுமை அதிகரிப்பு ஆகியவை குறிப்பிடப் பட்டன. ஒவ்வொரு பிரச்சினைக்கும் கிராம மக்களின் முன்னுரிமை யின் அடிப்படையில் 5 முதல் 1 வரை மதிப்பெண்கள் வழங்கப்பட்டு மொத்த மதிப்பெண் கணக்கிடப்பட்டது. இதில் நீர்ப்பாசனம் மற்றும் நீர் பற்றாக்குறை 14 மதிப்பெண்கள் பெற்று முதலிடத்தையும், பூச்சி மற்றும் நோய் தாக்குதல் 9 மதிப்பெண்கள் பெற்று இரண்டாம் இடத்தையும் பெற்றன. இதன் அடிப்படையில் நீர்ப்பாசன மேம்பாடு, நீர் சேமிப்பு முறைகள், ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை (IPM), இயற்கை மற்றும் உயிரியல் மேலாண்மை முறைகள், வேளாண் இயந்திரங் களின் பயன்பாடு மற்றும் கூட்டு உழைப்பு போன்ற தீர்வுகளைப் பின்பற்றுவதன் மூலம் இப்பிரச்சினைகளை குறைக்கலாம் என மாணவர்கள் விளக்கினர்.

மேலும், நெற்பயிரில் மஞ்சள் தண்டு துளைப்பான் (Yellow Stem Borer) தாக்குதல், அதன் அறிகுறிகள், பாதிப்புகள் மற்றும் கட்டுப்பாட்டு முறைகள் குறித்து விளக்குவதற்காக பிரச்சினை மரம் (Problem Tree) வரைபடம் மாணவர்களால் தயாரிக்கப்பட்டது.

இதில் மஞ்சள் தண்டு துளைப்பான் தாக்குதலால் குருத்துக்காய்வு (Dead Heart) மற்றும் வெள்ளைக்கதிர் (White Ear) போன்ற அறிகுறிகள் தோன்றுவதையும், இதனால் விளைச்சல் குறைவு, வருமான இழப்பு, பூச்சிக்கொல்லி செலவு அதிகரிப்பு மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படுவதையும் மரத்தின் கிளைகள் மூலம் விளக்கினர். இதனைத் தொடர்ந்து, சரியான நேரத்தில் நடவு செய்தல், பரிந்துரைக்கப்பட்ட உர மேலாண்மை, பயிர் சுழற்சி, வயல் சுகாதாரம், விளக்குப் பொறி (Light Trap), பெரோமோன் பொறி (Pheromone Trap), இயற்கை எதிரிகளின் பாதுகாப்பு மற்றும் IPM முறைகள் போன்ற ஒருங்கிணைந்த கட்டுப்பாட்டு நடவடிக்கைகளும் விளக்கப்பட்டன. இதன் மூலம் பூச்சித் தாக்குதலை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து, தேவையற்ற பூச்சிக்கொல்லி பயன் பாட்டைத் தவிர்த்து, சுற்றுச்சூழலுக்கு பாதுகாப்பான முறையில் நெல் விளைச்சலைப் பாதுகாக்கலாம் என மாணவர்கள் எடுத்துரைத்தனர். அத்துடன், நெற்பயிரைத் தாக்கும் முக்கிய பூச்சியான நெல் தண்டு துளைப்பானின் வாழ்க்கைச் சுழற்சி (Life Cycle of Paddy Stem Borer) வரைபடமாக வரையப்பட்டு விவசாயிகள் மற்றும் பொதுமக்களுக்கு விளக்கப்பட்டது. இதன் வாழ்க்கைச் சுழற்சி முட்டை புழு, கூட்டு அந்துப்பூச்சி முட்டை எனத் தொடர்ந்து நடைபெறுகிறது.

பெண் அந்துப்பூச்சி நெல் இலையில் முட்டைகளை கூட்டமாக இடுகிறது. அவை 5–8 நாட்களில் பொரிந்து புழுக்கள் வெளிவரும். புழுநிலை 25–30 நாட்கள் நீடித்து, நெல் தண்டுக்குள் சென்று திசுக்களை உண்பதால் குருத்துக் காய்வு (Dead Heart) மற்றும் வெள்ளைக்கதிர் (White Ear) போன்ற அறிகுறிகள் ஏற்பட்டு மகசூல் பாதிக்கப்படுகிறது. பின்னர் புழு 7–10 நாட்கள் கூட்டுலையில் இருந்து அந்துப்பூச்சியாக மாறுகிறது. அந்துப்பூச்சி 3–7 நாட்கள் வாழ்ந்து மீண்டும் முட்டையிடுவதால் வாழ்க்கைச் சுழற்சி தொடர்கிறது என மாணவர்கள் விளக்கினர்.

மேலும், வயலில் முட்டைக் கூட்டங்கள், குருத்துக்காய்வு மற்றும் வெள்ளைக் கதிர்கள் போன்ற அறிகுறிகளை தொடர்ந்து கண் காணித்து, ஆரம்ப நிலையிலேயே கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை

மேற்கொள்வதன் முக்கியத்துவம் எடுத்துரைக்கப்பட்டது. தேவையான போது வேளாண்மைத் துறையின் பரிந்துரைப்படி ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை முறைகளைப் பயன்படுத்தவும் விவசாயிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் தென்மலை கிராம விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு மாணவர்களுடன் கலந்துரையாடினர். கிராம மக்களின் நேரடி பங்கேற்புடன் PRA கருவிகளைப் பயன்படுத்தி உள்ளூர் வேளாண் பிரச்சினைகளை கண்டறிந்து, அவற்றுக்கான தீர்வுகள் மற்றும் விழிப்புணர்வை ஏற்படுத்திய இந்நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது.



# தமிழக வேளாண் பட்ஜெட் - மண்வள பாதுகாப்பு இயக்கம் - ஒரு பார்வை

6.8.26 அன்று தமிழக சட்டபேரவையில் வேளாண்மை அமைச்சர் வேளாண் நிதிநிலை அறிக்கை (AGRICULTURAL BUDGET 26- 27) தாக்கல் செய்தார் அதில் உள்ள சிறப்பு அம்சங்கள் குறித்து விரிவாக பார்ப்போம்.



**1) மண் வள பாதுகாப்பு இயக்கம்**

இது 600 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஐந்தாண்டு திட்டமாக இந்த ஆண்டு அறிமுகப்படுத்தப்படுகிறது.

மண்வளத்தை அறிந்து அதற்கேற்ப சமச்சீர் உரப் பயன்பாட்டை ஊக்குவிக்கும் விதமாக மண்வள அட்டை (SOIL HEALTH CARD) 4 கோடி ரூபாய் மாநில நிதி ஒதுக்கீட்டில் வழங்கபடும்.

மண்வளத்தை மீட்டெடுக்கும் வகையில் பசுந்தாள் உரப் பயிர்களின் உர விதைகள், 22 ஆயிரம் ஏக்கருக்கு தேவையான பல்வகை தானிய விதைகள் விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்குவதுடன் அவற்றை மடக்கி உழது மட்கச் செய்ய ஏக்கருக்கு 3000 உழவு மானியம் வழங்கப் படுகிறது.

இரசாயன உரங்களின் பயன்பாட்டை குறைக்கவும், பயிர் வினை ஊக்கி, காட்டன் பிளஸ், ரைஸ்புளூம், சுகர்கேன் பூஸ்டர் போன்றவை விவசாயிகளுக்கு வழங்கிட 12 கோடியே 38 லட்சம் ரூபாய் செலவில் வினியோகப்படும். இயற்கை வேளாண்மைக்கான தேசிய இயக்கத்தால் 2026-27ஆம் ஆண்டில் 9 கோடியே 12 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு.

தேசிய உயிர்ம உற்பத்தி திட்டத்தில் (NPOP), புதிதாக பதிவு செய்யும் விவசாயிகளுக்கு பதிவு கட்டணம் (REGISTRATION FEE) மாறுதல் காலத்துல உள்ள புதுப்பித்தல் கட்டணமும் செலுத்துவதில் விலக்கு அளிக்கப்பட்டு, உயிர்ம விவசாயி களுக்கு உயிர்ம வாய்ப்பு சான்றிதழ் (SCOPE CERTIFICATE) வழங்கப்படும்.

உயிர்ம விளைப்பொருட்களுக்கு நச்சு மதிப்பீடு (RESIDUE ANALYSIS) செய்வதற்கான கட்டணத்திற்கு முழு மானியம் வழங்கும் பொருட்டு 25 லட்சம் ரூபாய் மாநில நிதி ஒதுக்கீடு.

**2) களர் உவர் நில மேம்பாடு**

களர் நிலங்களை சீர்திருத்த செய்யும் வகையில் 2000 ஏக்கரில் மேற்கொள்ள 2 கோடி ரூபாய் ஒதுக்கீடு.

**3) மண் நல மேம்பாடு**

மண் நல மேம்பாடு குறித்த தொழில்நுட்பங்களை உழவர் பெருமக்களுக்கு எடுத்துரைக்க விழிப்புணர்வு மற்றும் விளம்பர பணிகளுக்கு 2 கோடி ரூபாய் ஒதுக்கீடு.

காலநிலை மாற்றத்தின் தாக்கத்தை எதிர் கொள்ள நேரடி நெல் விதைப்பு நீர் மறைய நீர்கட்டு (AWD) பாசன முறை, பசுமைக்குடில் வாயு வெளியேற்றுவதற்கு மண்ணில் சேமிக்கும் (CARBON SEQUESTRATION) விவசாயிகளுக்கு வருமானம் பெறுவதை ஊக்குவிக்க 2000 ஏக்கரில் செயல்விளக்கம் அமைக்க 60 லட்சம் நிதி ஒதுக்கீடு.

மேலே குறிப்பிட்ட இனங்களில் 2026-27 ஆம் ஆண்டில் 122 கோடியே 51 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

தகவல் : அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.



# மின்னணு தேசிய வேளாண் சந்தை மற்றும் பண்ணை வாயில் சந்தைப்படுத்துதல் பற்றி ஒரு நாள் பயிற்சி



திருச்சி, ஆக.8

திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருவரம்பூர் வட்டாரத்தில் உள்ள சோழமாதேவி கிராம விவசாயிகளுக்கு மின்னணு தேசிய வேளாண் சந்தை மற்றும் பண்ணை வாயில் சந்தைப்படுத்துதல் பற்றி ஒரு நாள் பயிற்சி அளிக்கப்பட்டது. இப்பயிற்சிக்கு வேளாண்மை உதவி இயக்குனர் சுகன்யா தேவி தலைமை வகித்து சம்பா முன்பருவ சாகுபடி தொழில்நுட்பங்கள், வேளாண்மை விரிவாக்கம் மையத்தில் உள்ள இடுப்பொருட் களின் விவரங்கள் மற்றும் மானியங்கள் குறித்தும், வறட்சி காலங்களில் வீரியமான விதை முளைப்பதற்கு கடைபிடிக்க வேண்டிய விதை நேர்த்தி முறைகள் பற்றி விரிவாக எடுத்துக் கூறி செயல் விளக்கம் செய்து காண்பித்தார். இதில் வேளாண் வணிகம் மற்றும் விற்பனை துறையை சேர்ந்த வேளாண்மை அலுவலர் நவித்தா கலந்து கொண்டு E-NAM மற்றும் பண்ணை வாயில் சந்தைப்படுத்துதல் முக்கியத்துவம் பற்றி எடுத்துக் கூறியதாவது, விவசாயிகள் தங்கள் விளை பொருட்களை ஆன்லைன் மூலம் அதிக விலைக்கு விற்பனை செய்ய மின்னணு தேசிய வேளாண் சந்தை முக்கிய பங்கு வகித்து வருகிறது எனவும், திருச்சியில் 8 ஒழுங்குமுறை விற்பனை கூடங்களில் E-NAM செயல்பட்டு வருகிறது எனவும் கூறினார். மேலும் பண்ணை வாயில் சந்தைப்படுத்தல் திட்டத்தில் துறை அலுவலர்கள் விவசாயிகளின் விளை நிலத்திற்கே சென்று E-NAM - Mobile App செயலி மூலம் விவசாயிகளின் வேளாண்மை பொருட்களை நேரடியாக வணிகர்களுக்கு விற்று தரப்படுகிறது, மேலும் பாரத பிரதமரின் வேளாண் நிறுவனங்களை முறைப் படுத்தப்படும் திட்டம், 100 மதிப்பு கூட்டும் திட்டங்கள் பற்றி விரிவாக விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினார்.

இறுதியில் வட்டார தொழில்நுட்ப மேலாளர் சுபாதேவி அட்மா திட்ட செயல்பாடுகள் பற்றி எடுத்து கூறி நன்றி உரையாற்றி பயிற்சிகான ஏற்பாடுகளை செய்திருந்தார்.

# Rithvik Pipe

IS 4985 : 2021
IS 9537

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்**
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - | ASTM UPVC PIPE - | ISI CONDUIT PIPE - | ISI PLUMBING PIPE - | ISI BOREWELL CASING PIPE - |
|---|---|---|---|---|
| 20mm to 250mm (All Classes) | 21mm to 114mm (SCH 40, SCH80) | 16mm to 63mm (Light, Medium, Heavy) | 25mm to 50mm (15KG) | 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

**Office**
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

**Factory**
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# நான்கு நாட்களுக்கான சேலம் மாவட்ட வானிலை முன்னறிவிப்பு : சந்தியூர் கேவிகே வெளியீடு

சேலம், ஆக.8

சேலம் மாவட்டம், மாவட்ட வேளாண் வானிலை மையம், சந்தியூர், வேளாண்மை அறிவியல் நிலையம், திட்ட ஒருங்கிணைப்பாளர், இரா.விஜயன், மா.இரவி மற்றும் செ.பிரபாகரன் கூறியதாவது.

சேலம் மாவட்டத்தில் நான்கு நாட்களுக்கான (இன்று முதல் 12ம் தேதி வரை) வானிலையில், வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும் மற்றும் மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் லேசான மழைக்கு வாய்ப்புள்ளது. பகல் வெப்பம் 34.0°செ. (93.2°பா)-க்கு மிகாமலும், இரவு வெப்பம் 24.0°செ. (75.2°பா) ஆகவும் காணப் படும். காற்றின் திசை பெரும்பாலும் மேற்கு திசையிலிருந்து வீச அதன் வேகம் மணிக்கு 10-12 கி.மீ. என்றளவில் வீசும். காற்றின் ஈரப்பதம் 40-90%மாக நிலவும்.

பகல் பொழுதில் நிலவும் அதிக வெப்பநிலை காரணமாக மண்ணிலிருந்து நீர் ஆவியாவதைத் தடுக்க குறிப்பாக காய்கறிகள் மற்றும் இதர தோட்டக்கலைப் பயிர்களின் வேர்ப்பரப்பில் காய்ந்த இலைகள், சருகுகள் அல்லது தென்னை மட்டைகள் போன்ற வற்றைக் கொண்டு மூடாக்கு அமைப்பதன் மூலம் மண்ணின் ஈரப்பதத்தைப் பாதுகாக்கலாம். மேலும் செம்மண் அதிகமாகக் காணப்படும் நமது மாவட்டத்தில் அதிகப்படியான நீர் தேங்காமல் இருக்க முறையான வடிகால் வசதியை உறுதி செய்யவும். அவ்வப் போது பெய்யும் மழையின் இடையிடையே பயிருக்குத் தேவையான நுண்ணூட்டச் சத்துக்களை இலைவழித் தெளிப்பாக தெளிக்கலாம்.

விவசாயிகள் தற்போது துவங்கியுள்ள ஆடிப்பட்டத்தில் பயறு வகைப் பயிர்கள் சாகுபடி செய்ய விரும்பும் விவசாயிகள், எல்நினோ விளைவு காரணமாக மழை இல்லாததால், வறட்சியைத் தாங்கி, குறைந்த அளவு நீர் தேவைப்படும் உளுந்து மற்றும் பாசிப்பயிறு போன்ற பயறு வகைப் பயிர்களை சாகுபடி செய்யுமாறு அறிவுறுத் தப்படுகிறார்கள். மேலும் விதைப்பதற்கு முன் விதைகளை டிரைக்கோடெர்மா விரிடி மற்றும் பேசில்லஸ் சப்டிலஸ் என்ற எதிர் உயிர் பூஞ்சாண மற்றும் பாக்டீரியாக் கொல்லியுடன் ஒரு கிலோ விதைக்கு தலா 10 கிராம் என்ற அளவில் விதை நேர்த்திசெய்து விதைப்பதால் வேர் அழுகல் நோய் வராமல் தடுத்து அதிக மகசூல் பெறலாம்.

வரும் நாட்களில் வெப்பநிலை உயர்வின் காரணமாக காய்கறிப் பயிர்களில் சாறு உறிஞ்சும் பூச்சிகளின் தாக்குதல் அதிகமாக இருக்கக்

பயிர்களில் சாறு உறிஞ்சும் பூச்சிகளின் தாக்குதல் அதிகமாக இருக்கக் கூடும். இதனால் மகசூல் இழப்பு ஏற்பட நிறைய வாய்ப்புள்ளது. எனவே இதன் பாதிப்பைக் கட்டுப்படுத்த, மஞ்சள் வண்ண ஒட்டும் பொறியை ஒரு ஏக்கருக்கு 5 என்ற எண்ணிக் கையில் வைத்து அவற்றைக் கண்காணிக்க வேண்டும். மேலும் வேப்ப எண்ணெய் மற்றும் புங்கம் எண்ணெய் ஆகியவை தலா 75 மி.லி மற்றும் காதி சோப்பு திரவம் 20 மி.லி வீதம் ஒரு டேங்கிற்கு கலந்து இலைவழி தெளிப்பாக தெளித்து கட்டுப்படுத்தலாம்.

கொய்யா மாவு பூச்சிகள் (Mealybugs) என்பது கொய்யா மரங் களை தாக்கும் ஒரு வகையான பூச்சிகள். இவை தாவரங்களில் இருந்து சாறை உறிஞ்சி வாழ்கின்றன. குறிப்பாக ஈரப்பதம் மற்றும் வெப்பமான பகுதிகளில் இவை அதிகம் காணப்படும். மாவுப் பூச்சிகள் கொய்யா மரங்களின் இலைகள் / தண்டுகள் மற்றும் பழங் களில் படிந்து / அவற்றை சேதப்படுத்தும். கொய்யா மரங்களில் மாவு பூச்சிகளைக் கட்டுப்படுத்த 1 லிட்டர் தண்ணீரில் 5 மில்லி வேப்ப எண்ணெய் மற்றும் 5 மில்லி பாத்திரம் கழுவும் திரவத்தை கலந்து / பாதிக்கப்பட்ட பகுதிகளில் தெளிக்கவும். பூச்சிகள் மீண்டும் வருவ தைத் தடுக்க / அவ்வப்போது தொடர் இடைவேளையில் இந்த வேப்ப எண்ணெய் கரைசலை தெளிக்கவும். மேலும் பாதிக்கப்பட்ட இலைகள், கிளைகள் மற்றும் பழங்களை அகற்றி அழிக்க வேண்டும்.

மல்லிகைப்பூப் பயிரில் மொட்டுப்பேன் தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. தாக்குதலின் ஆரம்ப நிலையில் பாதிக்கப்பட்ட மொட்டானது மஞ்சள் கலந்த சாம்பல் நிறத்தில் காணப்படும். மொட்டுக்கள் பெரிதாகாமல் / சிறுத்து காபி நிறத்தில் மாறி பின் காய்ந்து விடும். இதனைக் கட்டுப்படுத்த 10 லிட்டர் தண்ணீருக்கு 30 மில்லி என்றளவில் புரோபன்னோபாஸ் மற்றும் 20 கிராம் கார்டாப் ஹைட்ரோகுளோரைடு உடன் 10 மில்லி ஒட்டுப்பசை சேர்த்து தெளித்து கட்டுப்படுத்தலாம்.

● மருந்து தெளிக்கும் வேலைகளை கண்டிப்பாக மழை பெய்யும் நாட்களில் மேற்கொள்ளக்கூடாது.

**ஆட்டுக்கொல்லி நோய் மேலாண்மை**

இந்நோய் தமிழ்நாட்டில் ஆண்டு முழுவதும் காணப்படுகிறது. இந்த நோய் உள்ள ஆடுகளின் கண்ணீர், சளி, உமிழ்நீர் மற்றும் சாணம் ஆகியவற்றின் மூலம் நோய்க்கிருமி வெளியேறுகிறது. பாதிக்கப்பட்ட ஆடுகளை விழாக்கள் மற்றும் சந்தைகளில் மிக நெருக்கமாக வைக்கும் போது இந்நோய் மற்ற ஆடுகளுக்கும் பரவ வாய்ப்புள்ளது. புதிதாக வாங்கி மந்தைகளில் சேர்க்கப்படும் ஆடுகள் மூலமாகவும் இந்த நோய் பரவும்.

**நோய் அறிகுறிகள்**

● திடீரென்று ஏற்படும் கடுமையான காய்ச்சல், மிகவும் சோர்வடைதல், தீவனம் உட்கொள்ளாமை போன்ற அறிகுறிகள் தென்படும்.

● ஆரம்பத்தில் மூக்கிலிருந்து நீர் போன்ற சளி வடிதல் பின் கட்டியாக சீல் போன்று உறைவதால் சுவாசிப்பதில் சிரமம் மற்றும் மூச்சு காற்று அசுத்த வாடையுடன் இருக்கும்.

● ஆரம்ப கட்டத்தில் வாயில் இறந்த திசுக்களால்ஈறு, பல்திண்டு, இடையண்ணம், கன்னங்கள் மற்றும் நாக்கு பகுதிகளில் புண்கள் உருவாதல்.

● பாதிக்கப்பட்ட ஆடுகளுக்கு துர்நாற்றத்துடன் கூடிய கழிச்சல் ஏற்படும். இளம் ஆடுகள் மிக கடுமையாக பாதிக்கப்படுகின்றன.

● இந்த நோய் செம்மறியாடுகளை விட வெள்ளாடுகளையே அதிகம் தாக்குகின்றது.

இந்நோய்க்கான தடுப்பூசியை பருவமழைக்கு முன்னர் போடவேண்டும். முதலில் நான்கு மாதங்கள் மற்றும் அதற்கு மேலான ஆடுகளுக்கு தடுப்பூசி அளிக்கப்பட வேண்டும். பிறகு வருடத்திற்கு ஒரு முறை எல்லா ஆடுகளுக்கும் மறு தடுப்பூசி போட வேண்டும். இறுதிசினைப்பருவம் உள்ள ஆடுகள் மற்றும் பால் கொடுக்கும் ஆடுகளை தவிர்க்கலாம்.

மேலும் விவரங்களுக்கு திட்ட ஒருங்கிணைப்பாளர், வேளாண்மை அறிவியல் நிலையம், சந்தியூர் - 636 203, சேலம் மாவட்டம். தொலைபேசி எண் : 0427 - 2422550 தொடர்பு கொள்ளலாம்.

## உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகத்தில் வேளாண்மைக் கல்லூரி மாணவர்களுக்கு செயல்முறை பயிற்சி

விருதுநகர், ஆக.8

விருதுநகர் உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகத்தில் தங்கப்பழம் வேளாண்மைக் கல்லூரி மாணவர்களுக்கு செயல்முறை பயிற்சி நடைபெற்றது. விருதுநகர் மாவட்ட வேளாண்மைத் துறையின் கீழ் செயல்பட்டு வரும் உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகத்திற்கு தங்கப் பழம் வேளாண்மைக் கல்லூரியைச் சேர்ந்த 80 மாணவர்கள் கல்விச் சுற்றுலாவின் ஒரு பகுதியாக வருகை தந்து ஆய்வகத்தின் செயல்பாடுகளை நேரில் பார்வையிட்டு பயனடைந்தனர். மாணவர் களை வரவேற்ற வேளாண்மை அலுவலர் கா.அரிபுத்திரன், இயற்கை வேளாண்மை மற்றும் நிலையான விவசாயத்தில் உயிரியல் கட்டுப்பாட்டின் பங்கு குறித்து விரிவாக எடுத்துரைத்தார்.



பயிர்களைத் தாக்கும் பூச்சிகள் மற்றும் நோய்களை ரசாயன பூச்சிக் கொல்லி மருந்துகளை அதிகம் சாராமல், இயற்கை எதிரி உயிரினங்கள் மற்றும் நுண்ணுயிரிகளின் மூலம் கட்டுப் படுத்துவதன் அவசியம், அதன் சுற்றுச்சூழல் மற்றும் மனித நலன் சார்ந்த நன்மைகள் குறித்து விளக்கமளித்தார்.

தொடர்ந்து, உயிரியல் காரணிகளின் பல்வேறு வகைகள், அவற்றின் பண்புகள், பயிர் பாதுகாப்பில் அவற்றின் பயன்பாடுகள், ஆய்வகத்தில் மேற்கொள்ளப்படும் உற்பத்தி முறைகள், தரப் பராமரிப்பு நடைமுறைகள் மற்றும் சேமிப்பு முறைகள் குறித்து செயல்முறை விளக்கத்துடன் பயிற்சி அளிக்கப்பட்டது. மேலும், உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகத்தில் தினசரி மேற்கொள்ளப்படும் உற்பத்திப் பணிகள், உயிரியல் காரணிகளை பெருமளவில் உற்பத்தி செய்யும் தொழில்நுட்பங்கள், விவசாயிகளுக்கு வழங்கப் படும் சேவைகள், களத்தில் உயிரியல் காரணிகளை பயன்படுத்தும் முறைகள், பயன்பாட்டு அளவுகள், பயன்படுத்த வேண்டிய காலம் மற்றும் அவற்றின் செயல்திறனை அதிகரிக்கும் வழிமுறைகள் குறித்து மாணவர்களுக்கு தெளிவாக எடுத்துரைக்கப்பட்டது.

உயிரியல் கட்டுப்பாட்டு தொழில்நுட்பங்களின் எதிர்காலத் தேவைகள், சுற்றுச்சூழலுக்கு உகந்த விவசாய முறைகளில் அவற்றின் முக்கியத்துவம், வேளாண் பட்டதாரிகளுக்கு இத்துறை யில் உள்ள வேலைவாய்ப்புகள், தொழில்முனைவோர் வாய்ப்புகள் மற்றும் ஆராய்ச்சி சார்ந்த வளர்ச்சி வாய்ப்புகள் குறித்தும் விரிவாக விளக்கமளிக்கப்பட்டது. பயிற்சியின் ஒரு பகுதியாக ஆய்வகத்தில் தயாரிக்கப்படும் உயிரியல் காரணிகள், அவற்றின் உற்பத்தி அறைகள், வளர்ப்பு வசதிகள் மற்றும் தரக் கண்காணிப்பு நடை முறைகளை மாணவர்கள் நேரில் பார்வையிட்டு, தங்களது சந்தேகங்களுக்கு விளக்கங்களைப் பெற்றனர். செயல்முறை விளக்கங்களுடன் நடைபெற்ற இந்தப் பயிற்சி மாணவர்களுக்கு பயனுள்ள அனுபவமாக அமைந்தது. இந்நிகழ்வில் கல்லூரி பேராசிரியர்கள், ஆய்வக அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டு மாணவர்களுக்கு தேவையான வழிகாட்டுதல் களை வழங்கினர்.

சுற்றுச்சூழலுக்கு உகந்த, நிலையான வேளாண்மை நடைமுறைகளை மாணவர்கள் எதிர்காலத்தில் விவசாயிகளிடம் கொண்டு சேர்க்கும் வகையில் இந்தக் கல்விச் சுற்றுலா சிறப்பாக அமைந்தது.

# பயறுவகை பயிர் சாகுபடி திறன் மேம்பாட்டுப் பயிற்சி!



சேலம், ஆக.8

சேலம் மாவட்டம், தலைவாசல் வட்டாரத்திற்குட்பட்ட ஊனத்தூர் மற்றும் லத்துவாடி ஆகிய கிராமங்களில் பயறுவகை பயிர்களைப் பயிரிடும் விவசாயிகளுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சி முகாம் நடைபெற்றது. லத்துவாடி கிராமத்தில் நடை பெற்ற பயிற்சி முகாமிற்கு வேளாண்மை உதவி இயக்குனர் தலைமை தாங்கிப் பேசுகையில், பயறுவகை பயிர்களில் கூடுதல் மகசூல் பெறுவதோடு மண்வளத்தையும் பாதுகாப்பதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

தொடர்ந்து, உதவி வேளாண்மை அலுவலர் சுப்ரமணியன் பயறுவகை பயிர்களில் விளைச்சலை பெருக்குவதற்கான நவீன தொழில்நுட்பங்கள் குறித்தும், உதவி வேளாண்மை அலுவலர் பெரியசாமி வேளாண்மைத் துறையில் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு அரசு நலத்திட்டங்கள் குறித்தும் விவசாயிகளுக்கு விரிவாக எடுத்துரைத்தனர். உதவி தொழில்நுட்ப மேலாளர் முத்துவேல் நோய்த் தாக்குதலைத் தடுத்து வீரியமான பயிர் வளர்ச்சியைப் பெற விதைநேர்த்தி செய்யும் முறைகள் குறித்து விளக்கமளித்தார்.

இதேபோல் ஊனத்தூர் கிராமத்தில் நடைபெற்ற பயிற்சியில், வேளாண்மை அலுவலர் ஜானகி கலந்து கொண்டு பருவத்திற்கு ஏற்ற பயிர் ரகங்களைத் தேர்வு செய்யும் முறைகள் மற்றும் நவீன சாகுபடி தொழில்நுட்பங்களை விளக்கினார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் சக்தி, பயிர்களுக்குத் தேவையான ஊட்டச்சத்துக்களை சீராக வழங்கும் சமச்சீர் உர மேலாண்மை குறித்து உரையாற்றி னார். தொடர்ந்து, உதவி வேளாண்மை அலுவலர் பிரகாஷ் விவசாய நிலங்களில் மண்மாதிரி எடுக்கும் முறையை நேரடி செயல்விளக்கமாகச் செய்து காண்பித்து, அதன் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார். இப்பயிற்சி முகாமிற்கான ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர்கள்திவ்யபாலா, நாகராஜ், தமிழ்ச்செல்வன் மற்றும் கார்த்திக் ஆகியோர் சிறப்பாகச் செய்திருந்தனர். இப்பயிற்சியில் சுற்று வட்டாரத்தைச் சேர்ந்த 60க்கும் மேற்பட்ட முன்னோடி விவசாயிகள் கலந்து கொண்டு தொழில்நுட்பங்களைக் கற்றுப் பயனடைந்தனர்.

# ஆற்றல் சேமிப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி – சூரிய சக்தி பம்ப் செட் குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு



மதுரை, ஆக.8

திண்டுக்கல் காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக் கழகத்தின் வேளாண்மை மற்றும் கால்நடை அறிவியல் பள்ளியில் B.Sc. (Hons.) வேளாண்மை இறுதியாண்டு பயிலும் மாணவிகள் தாரணி லோகநாதன், தர்ஷினி, கிருஷ்ண பிரியா, கல்கி, அமிர்த கார்த்திகா மற்றும் லாவன்யா ஆகியோர், RAWE (Rural Agricultural Work Experience) திட்டத்தின் ஒரு பகுதியாக, அழகாபுரி கிராமத்தில் 4.8.26 அன்று சுரேஷ் என்பவரின் விவசாயத் தோட்டத்தில் ஆற்றல் சேமிப்பு மற்றும் சூரிய சக்தி பம்ப் செட் (PM-KUSUM திட்டம்) குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்தினர்.

இந்நிகழ்ச்சியின் முக்கிய நோக்கம், விவசாயிகளிடையே மின்சாரத்தை சிக்கனமாகப் பயன்படுத்துவதன் அவசியம், சூரிய சக்தியைப் பயன்படுத்தி நீர்ப்பாசனம் மேற்கொள்வதன் நன்மைகள் மற்றும் பிரதமரின் PM-KUSUM திட்டத்தின் பயன்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதாகும். இதற்காக தயாரிக்கப்பட்ட விளக்கப்படத்தின் (Chart) மூலம் சூரிய சக்தி பம்ப் செட்டின் செயல் பாடு, முக்கிய பாகங்கள், பயன்பாடுகள் மற்றும் அதன் நன்மைகள் குறித்து விவசாயிகளுக்கு எளிமையாக விளக்கப்பட்டது.

சூரிய சக்தி பம்ப் செட் என்பது சூரிய ஒளியை மின்சாரமாக மாற்றி, அந்த மின்சாரத்தின் மூலம் நீரை இறைக்கும் அமைப்பாகும். இதில் சூரிய மின் தகடுகள் (Solar Panels), கட்டுப்பாட்டு கருவி (Controller/Inverter), மின்மோட்டார், பம்ப் மற்றும் தாங்கும் அமைப்பு (Mounting Structure) ஆகியவை முக்கிய பாகங்களாக உள்ளன என மாணவிகள் எடுத்துரைத்தனர்.

மேலும், சூரிய பம்ப் செட்டின் மூலம் மின்சாரச் செலவை குறைத்தல், மின் தடை நேரங்களிலும் நீர்ப்பாசனம் மேற்கொள்ளுதல், எரிபொருள் செலவைத் தவிர்த்தல், குறைந்த பராமரிப்பு செலவில் இயங்குதல் மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்பைக்

குறைத்தல் போன்ற பல்வேறு நன்மைகள் கிடைப்பதாக விளக்கப்பட்டது. முறையான பராமரிப்புடன் சூரிய மின் தகடுகள் நீண்ட காலம் பயன்படக்கூடியவை என்பதும் எடுத்துரைக்கப்பட்டது.

பாரம்பரிய மின்சார பம்ப் செட்களுடன் ஒப்பிடுகையில், சூரிய பம்ப் செட்களில் மின்சாரக் கட்டணம் மற்றும் மின் தடையால் ஏற்படும் சிரமங்கள் குறைவதுடன், சூரிய சக்தியைப் பயன்படுத்தி நீர்ப்பாசனத்தை மேற்கொள்ள முடியும் என விவசாயிகளுக்கு விளக்கப்பட்டது. இதன் மூலம் நீர், மின்சாரம் மற்றும் எரிபொருள் பயன்பாட்டை சிக்கனமாக்கி நிலையான வேளாண்மையை மேம்படுத்த முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது.


தொடர்ந்து, PM-KUSUM திட்டம் குறித்தும் விவசாயிகளுக்கு விழிப்புணர்வு அளிக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் சூரிய சக்தி பம்ப் செட்களை அமைப்பதற்கான மானியம், விவசாயிகளின் பங்களிப்பு, வங்கிக் கடன் வசதி மற்றும் விண்ணப்பிக்கும் நடைமுறை போன்றவை குறித்து விளக்கப்பட்டது. மேலும், பம்ப் திறனைப் பொறுத்து செலவு மாறுபடும் என்பதையும், 3 HP, 5 HP மற்றும் 7.5 HP போன்ற திறன் கொண்ட சூரிய பம்ப் செட்கள் விவசாயப் பயன்பாட்டில் இருப்பதையும் எடுத்துரைத்தனர்.

இத்திட்டத்தின் கீழ் தகுதி பெறும் தனிப்பட்ட விவசாயிகள், விவசாயிகள் குழுக்கள், FPOs, WUAs மற்றும் கூட்டுறவு அமைப்புகள் தொடர்புடைய வழிகாட்டுதல்களின்படி விண்ணப்பிக்க முடியும் என தெரிவிக்கப்பட்டது. சூரிய பம்ப் செட் மூலம் நீர்ப்பாசனச் செலவைக் குறைப்பதுடன், நீண்ட காலத்தில் வேளாண் உற்பத்திச் செலவைக் கட்டுப்படுத்த உதவும் என்பதும் விளக்கப்பட்டது.

நிகழ்ச்சியில் பங்கேற்ற விவசாயிகள் சூரிய பம்ப் செட்டின் அமைப்பு செலவு, அரசின் மானியம், விண்ணப்பிக்கும் முறை, பராமரிப்பு, பம்பின் திறன் மற்றும் ஆயுட்காலம் குறித்து ஆர்வத்துடன் கேள்விகளை எழுப்பினர். மாணவிகள் அவர்களின் சந்தேகங்களுக்கு விளக்கமளித்தனர்.

இந்நிகழ்ச்சியின் மூலம் விவசாயிகளிடையே ஆற்றல் சேமிப்பு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வு அதிகரித்ததுடன், சூரிய சக்தி பம்ப் செட்களை வேளாண்மையில் பயன்படுத்துவதற்கான ஆர்வமும் ஏற்பட்டது.

RAWE திட்டத்தின் மூலம் விவசாயிகளுடன் நேரடியாக தொடர்பு கொண்டு, புதிய வேளாண் தொழில்நுட்பங்களை அவர்களுக்கு எடுத்துரைத்த இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சி பயனுள்ளதாகவும் வெற்றிகரமாகவும் அமைந்தது.


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# நவீன வேளாண்மையில்

# தென்னை நார்க்கழிவு உரம் செய்முறை

ஒரு டன் தென்னை நார்க்கழிவு மக்க வைக்க 5 பாட்டில் சிப்பிக்காளான் மற்றும் 5 கிலோ யூரியா தேவைப்படும். தென்னை நார்க்கழிவினை எடுத்து வந்து நிழலான பகுதியில் 5 மீட்டர் நீளம் 3 மீட்டர் அகலம் படுக்கையில் 100 கிலோ தென்னை நார்க்கழிவினை பரப்ப வேண்டும். அதன் மீது 1 பாட்டில் (250 கிராம்) ப்ளூராட்டஸ் சிப்பிக் காளானை சீராகத் தூவ வேண்டும் மீண்டும் 130 கிலோ நார்க்கழிவினை இட வேண்டும். அதன் மீது 1 கிலோ யூரியாவைத் தெளிக்க வேண்டும்.

இவ்வாறு நார்க்கழிவு சிப்பிக் காளான் நார்க்கழிவு யூரியா என்று அடுக்கடுக்குகளாக போட வேண்டும். இவ்வாறு 10 அடுக்குகள் அதாவது 1 டன் அளவில் படுக்கை அமைத்து வாரம் இருமுறை தண்ணீர் தெளித்து வர வேண்டும் நார்க்கழிவு மக்குவதற்கு சுமார் மூன்று மாத காலம் பிடிக்கும். தென்னை நார்க்கழி நன்றாக மக்கிய பின் கருமையான பழுப்பு நிறத்தை அடைத்து விடும்.

தென்னை நார்க்கழிவு மக்கு உரம் விவசாயத்திற்கு பயன் படுத்துவதன் மூலம் மண்ணின் நீர் பிடிப்புத் தன்மை அதிகரிப்ப துடன் மண்ணிற்கு தேவையான தழைச்சத்து, மணிச்சத்து சாம்பல்சத்து மற்றும் இரும்புச்சத்து மாங்கனீசு துத்தநாகம தாமிரம் போன்ற நுண்ணூட்டச் சத்துக்களும் கிடைக்கின்றன. கரிமப்பொருட்கள் குறைபாடு உள்ள மண்வகைகளில் மக்கிய நார்க்கழிவு இடுவதால் மண்வளம் மேம்படுத்தப்படுகிறது.

**தென்னை நார்க்கழிவு மக்கு உரப்பயன்கள்**

தென்னை நார்கழிவு மக்கு உரம் மண்ணில் இடுவதால்

- பயிருக்குத் தேவையான ஊட்டச்சத்துக்கள் கிடைக்கின்றன.
- பயிரின் வேர்ப்பகுதிகளுக்கு தேவையான காற்றோட்டம் கிடைக்கின்றது.
- மண்ணின் நீர்ப்பிடிப்புத்தன்மை அதிகரித்து பயிர் வளர்ச்சிக்கு உதவுகிறது.
- மண்ணின் பௌதீக பண்புகள் செம்மையடைகிறது.
- காற்று மாசுப்பாட்டினை பெரிதும் குறைக்கிறது.

## வேளாண்மையில் கரும்பாலலைக்கழிவுகளின் பயன்பாடு

மண்வளம், பயிரின் விளைச்சல் திறனை நிர்ணயிக்கும் காரணிகளில் ஒன்றாகும். பயிர் வளர்ச்சிக்குத் தேவையான எல்லாச் சத்துக்களும் போதுமான அளவுகளில் இருந்து நச்சுத் தன்மையுடைய எந்தப்பொருளும் இல்லாதிருக்கும் மண் தான் வளமுடைய மண்ணாகக் கருதப்படும்.

இராசயன இடுபொருட்கள் மிகுதியாக பயன்படுத்தப்படுவதால் சுற்றுச்சூழலில் பலவகையான பாதிப்புகள் ஏற்படுகின்றன. ஆகவே இரசாயன உரங்களின் பயன்பாட்டை வெகுவாகக் குறைக்கவும் மண்ணில் அங்ககச் சத்துகளின் அளவை அதிகரித்து வளத்தைக் கூட்டவும் பதப்படுத்தப்பட்ட கரும்பாலைக் கழிவுகளை உபயோகப்படுத்தலாம்.

கரும்பாலைகளில் சர்க்கரை உற்பத்தி செய்யும் போது கரும்புச் சக்கை கர்க்கரைக் கழிவுக்கூழ் கரும்புககழிவு அழுக்கு மூன்றும் உப பொருட்களாக மிஞ்சும் அரைக்கப்படும் கரும்பு எடையில் 30-32 விழுக்காடு கரும்புச் சக்கையும் 4-5 விழுக்காடு சர்க் கரை கழிவுக்கூழும் 3-4 விழுக்காடு கரும்புச் கழிவு அழுக்கும் மொத்தம் 40 விழுக்காடு இந்த கழிவுப் பொருட்கள் மிஞ்சுகின்றன.

### கரும்புக்கழிவு அழுக்கிலுள்ள சத்துக்கள்

இந்தியாவில் உற்பத்தியாகும் 230 மில்லியன் டன்கள் கரும்பில் வெல்லம் தயார் செய்வதற்கு உபயோகப்படுத்தியது போக 120 மில்லியன் டன்கள் கரும்பாலலையில் அரைவை செய்யப்படுகின்றன. இந்தக் கரும்பிலிருந்து 3-4 மில்லியன் டன்கள் கரும்புக்கழிவு அழுக்கு உபபொருட்களாகக் கிடைக்கும். கரும்புக்கழிவு அழுக்கு எல்லாச் சத்துக்களுமுள்ள ஊட்டமிகுந்த எருவாகும். அரைவை செய்யப்படும் கரும்பின் தரத்தையும் ஆலையில் கரும்புச்சாறு சுத்தம் செய்யப்படும் முறையையும் பொறுத்துக் கரும்புக்கழிவு எருவில் ஊட்டச்சத்துக்களின் அளவுகள் மாறுபடும் சராசரியாகக் கரும்புக்கழிவு அழுக்கில் 1.0.1.6 விழுக்காடு தழைச்சத்து 1.0.3.0 விழுக்காடு மணிச்சத்து 1.0.2.0 விழுக்காடு சாம்பல்சத்து 1.0.4.0 விழுக்காடு கால்சியம் 0.5.2.0 விழுகாடு மக்னீசியம் 2000-2500 பி.எம்.இரும்பு 1500-2100 பிபிஎம் மாங்கனீசு 120-250 பிபிஎம் தாமிரம் 250-330 பிபிஎம் துத்நாகச் சத்துக்கள் உள்ளன. கரும்புக் கழிவு அழுக்கின் அமில கார நிலை 6.5.8.3 என்ற அளவிற்கு இடையில் இருக்கும்.

**எருவாகும் கரும்புக்கழிவு**

கரும்புக் கழிவு அழுக்கைக் கம்போஸ்டு செய்ய வேண்டிய அவசியமில்லை புஞ்சை சாகுபடி தோட்டக்கால் சாகுபடியில் கரும்புக்கழிவு அழுக்கை நேரடியாக முதல் உழவுக்குப்பின் கண்டிப்பாகக் கடைசி உழவுக்கு முன் நிலத்திட்டு உழுது மண்ணுடன் கலந்துவிட வேண்டும்.

தகவல் : *யுவராஜா தட்சிணாமூர்த்தி, வேளாண்மை பொறியாளர், உடுமலை.*




# லேடிபேர்டு வண்டு – விவசாயியின் நண்பன்



அறிமுகம்

வேளாண்மையில் பயிர்களுக்கு சேதம் விளைவிக்கும் பூச்சிகளைக் கட்டுப்படுத்த பல்வேறு முறைகள் பயன்படுத்தப்படு கின்றன. அவற்றில் சுற்றுச்சூழலுக்கு உகந்த மற்றும் நிலையான தீர்வாக உயிரியல் கட்டுப்பாட்டு முறை முக்கியத்துவம் பெறுகிறது. இம்முறையில் பயிர்களுக்கு நன்மை செய்யும் பூச்சிகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. அவற்றில் மிகவும் பிரபலமானது லேடிபேர்டு வண்டு (Ladybird Beetle) ஆகும். இது செடிகளுக்கு தீங்கு விளைவிக்கும் அசுவினி (Aphids), வெள்ளை ஈ, மாவுப்பூச்சி (Mealybug), செதில் பூச்சி (Scale insect) போன்ற மென்மையான உடல் கொண்ட பூச்சிகளை உணவாக உட் கொண்டு அவற்றின் எண்ணிக்கையை இயற்கையாகக் கட்டுப் படுத்துகிறது. இதனால் விவசாயிகள் பூச்சிக்கொல்லி மருந்துகளின் பயன்பாட்டைக் குறைத்து, பாதுகாப்பான மற்றும் தரமான விளைபொருட்களை உற்பத்தி செய்ய முடிகிறது.

**லேடிபேர்டு வண்டின் சிறப்பம்சங்கள்**

லேடிபேர்டு வண்டு சிறிய அளவிலான, வட்ட வடிவ உடலைக் கொண்ட அழகிய பூச்சியாகும். பொதுவாக சிவப்பு, ஆரஞ்சு அல்லது மஞ்சள் நிறத்தில் கருப்பு புள்ளிகளுடன் காணப்படும். இதன் முட்டை, புழு, கூட்டுப்புழு மற்றும் முழு வளர்ச்சி வண்டு ஆகிய நான்கு வளர்ச்சி நிலைகளும் காணப்படுகின்றன. குறிப்பாக புழு மற்றும் முழு வளர்ச்சி வண்டு ஆகிய இரு நிலைகளிலும் அதிக அளவில் தீங்கு விளைவிக்கும் பூச்சிகளை வேட்டையாடுகின்றன. ஒரு முழு வளர்ச்சி லேடிபேர்டு வண்டு ஒரு நாளில் பல டஜன் அசுவினி பூச்சிகளை உணவாக உட்கொள்ளும் திறன் கொண்டது. எனவே, இது இயற்கையின் திறமையான பூச்சி வேட்டையாடியாகக் கருதப்படுகிறது.

**வேளாண்மையில் லேடிபேர்டு வண்டின் பங்கு**

லேடிபேர்டு வண்டு பல்வேறு வேளாண் மற்றும் தோட்டக்கலைப் பயிர்களில் விவசாயிகளுக்கு பெரும் உதவியாக உள்ளது. பருத்தி, காய்கறிகள், நெல், பழவகைகள், பருப்பு வகைகள், மலர்ச் செடிகள் உள்ளிட்ட பல பயிர்களில் காணப்படும் தீங்கு விளைவிக்கும் பூச்சி களைக் கட்டுப்படுத்துகிறது. இதன் செயல்பாட்டால் பூச்சிக்கொல்லி மருந்துகளின் பயன்பாடு குறைகிறது. இதன் மூலம் உற்பத்திச் செலவு குறைவதுடன், சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படுகிறது.

மேலும், மண்ணின் நுண்ணுயிர்கள், தேனீக்கள் மற்றும் பிற பயன் உள்ள உயிரினங்களும் பாதுகாக்கப்படுகின்றன. எனவே, இயற்கை வேளாண்மை மற்றும் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை (IPM) முறைகளில் லேடிபேர்டு வண்டு முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது.

### லேடிபேர்டு வண்டுகளை பாதுகாப்பதற்கான வழிமுறைகள்



விவசாயிகள் தேவையற்ற மற்றும் அதிக நச்சுத்தன்மை கொண்ட பூச்சிக் கொல்லி மருந்துகளைப் பயன்படுத்து வதைத் தவிர்க்க வேண்டும். வயல்வெளி களில் மலர்ச்செடிகளை வளர்ப்பதன் மூலம் லேடிபேர்டு வண்டுகளுக்கு உணவு மற்றும் வாழ்விடத்தை உருவாக் கலாம். உயிரியல் கட்டுப்பாட்டு முறை களுக்கு முன்னுரிமை அளிப்பதும், பூச்சிக்கொல்லி மருந்துகளை பரிந்துரைக்கப்பட்ட அளவில் மட்டுமே பயன்படுத்துவதும் அவசியம். மேலும், வயலில் பயனுள்ள பூச்சிகளை அடையாளம் கண்டு பாதுகாக்கும் விழிப்புணர்வு விவசாயிகளிடம் உருவாக வேண்டும். இவ்வாறு செயல்பட்டால், லேடிபேர்டு வண்டுகளின் எண்ணிக்கை அதிகரித்து இயற்கையான பூச்சி கட்டுப்பாடு மேலும் வலுப்பெறும்.

### முடிவுரை

லேடிபேர்டு வண்டு உண்மையிலேயே விவசாயியின் இயற்கை நண்பனாக விளங்குகிறது. தீங்கு விளைவிக்கும் பூச்சிகளை கட்டுப் படுத்துவதன் மூலம் பயிர்களை பாதுகாப்பதோடு, பூச்சிக்கொல்லி மருந்துகளின் பயன்பாட்டைக் குறைத்து சுற்றுச்சூழல் பாது காப்பிலும் முக்கிய பங்கு வகிக்கிறது. நிலையான வேளாண்மை மற்றும் பாதுகாப்பான உணவு உற்பத்தியை நோக்கி முன்னேற விரும்பும் இன்றைய சூழலில், லேடிபேர்டு வண்டுகளைப் பாதுகாத்து அவற்றின் எண்ணிக்கையை அதிகரிப்பது ஒவ்வொரு விவசாயி யின் பொறுப்பாகும். இயற்கை வழங்கிய இந்த சிறிய நண்பனை பாதுகாப்பதன் மூலம் அதிக மகசூல், குறைந்த செலவு மற்றும் ஆரோக்கியமான வேளாண்மையை நாம் உருவாக்க முடியும்.



கட்டுரை ஆசிரியர் : *ச.பூர்ணிமா, உதவிப் பேராசிரியர் (பூச்சியியல்), பயிர் பாதுகாப்புத் துறை, நாளந்தா வேளாண்மைக் கல்லூரி, திருச்சி, தமிழ்நாடு. மின்னஞ்சல் : poorny29@gmail.com.*